# விக்ரோரிய நீர்நிலைகளில் நீலப் பச்சை அல்காக்கள்: உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்

## நீலப் பச்சை அல்காக்கள் என்பவை எவை?

நீலப் பச்சை அல்காக்கள் (சயனோபற்றீரியா) என்பவை பற்றீரிய உயிரங்கிகள் ஆகும், அவை தனித்தனியாக அல்லது கூட்டங்களாகத் தோன்றலாம், மேலும் அவை சிறுகுடாக்கள், ஆறுகள், ஏரிகள், ஈரநிலங்கள் முதலியவை உட்பட, கிட்டத்தட்ட சகல நீர்ச் சூழல்தொகுதிகளிலும் காணப்படுகின்றன. சில குறிப்பிட்ட சுற்றாடல் நிலைமைகளின் கீழ், அவற்றின் எண்ணிக்கைகளும் கூட்டங்களும் (அல்லது கழிவுகள்) சடுதியாக அதிகரிக்கலாம், இதனால் நீர் மேற்பரப்பு முழுவதும் சுலபமாக அவை கண்ணுக்குத் தெரியலாம். கூட்டங்கள் கடும் பச்சையிலிருந்து மஞ்சள் கலந்த மண்ணிறம் வரை பரந்துபட்ட நிறங்களில் இருக்கும். இந்தக் கூட்டங்கள் ஒரு புதிய தோற்றப்பாடு அல்ல, அவை பல நூற்றாண்டுகளாக உலகம் எங்கும் நிகழ்ந்து வந்துள்ளதாக அறியப்பட்டுள்ளன. நீலப் பச்சை அல்காக்களின் சில இனங்கள் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் தீங்கிழைக்கக் கூடிய நஞ்சுகளை உற்பத்தி செய்கின்றன.

## நான் நீலப் பச்சை அல்காக்களின் நஞ்சுகளுக்கு எப்படி ஆட்படலாம்?

நீலப் பச்சை அல்காக்களின் நச்சுப் பதார்த்தங்களுக்கு ஆட்படுவது பின்வரும் முறைகளின் ஊடாக நடக்கலாம்:

- காதுகள், கண்கள், வாய், மூக்கு, தொண்டை போன்ற உணர்ச்சிமிக்க பகுதிகள் உட்பட, உடலில் திறந்துள்ள பாகங்களுடன் நேரடியான தொடுகை
- பாதிக்கப்பட்ட தண்ணீரைத் தற்செயலாக விழுங்குதல்
- நீர்த் துளிகளையும் திவலைகளையும் சுவாசித்தல்; மற்றும்
- பாதிக்கப்பட்ட கடலுணவைச் சாப்பிடுதல்.

அல்காவால் பாதிக்கப்பட்ட தண்ணீர் படுவதைத் தவிர்க்கவும், குறிப்பாக கண்ணுக்குப் புலப்படக்கூடிய கழிவு நுரைகள் அல்லது நிறம் மாறிய தண்ணீர் உள்ள பகுதிகளில். பொழுதுபோக்குக்குரிய பாவனையாளர்களுக்கு ஏற்படக் கூடிய மிகப்பெரிய ஆபத்தானது அல்காவின் மேற்பரப்புக் கழிவுநுரைகளால் முன்வைக்கப்படுகிறது. இவை நீலப் பச்சை அல்காக்களின் செறிவான திரட்சிகள், இவை கரையோரங்களின் நீளத்திற்கு படிந்துகொள்ளும் தன்மையுள்ளவை, எனவே பொழுதுபோக்குக்காக தண்ணீரைப் பாவிப்பவர்கள், சிறுவர்கள் மற்றும் நாய்கள் இந்தத் தண்ணீரில் நுழைகையில் அநேகமாக அவர்களில் தொடுகையுறுகின்றன.

பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள தகவல் சின்னங்கள் எதிலுமுள்ள அறிவுரையைப் பின்பற்றுங்கள், மேலும் அங்கு இனிமேல் ஆபத்தில்லை என்று அதிகாரசபைகள் அறிவுறுத்தும் வரை அந்தத் தண்ணீரைத் தொடுவதைத் தவிருங்கள். உங்களுடைய உள்ளூர் நீர்வழிகள் நீலப் பச்சை அல்காக்களால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகித்தால், மேலதிக ஆலோசனைக்கு நீர்வழி முகாமையாளரைத் தொடர்புகொள்ளுங்கள் அல்லது http://emergency.vic.gov.au/respond/-இிலுள்ள விக். அவசரநிலைச் சம்பவம் மற்றும் எச்சரிக்கைகள் இணையதளத்தைப் பாருங்கள்

Victoria State Government | Health and Human Services

தண்ணீரைத் தொட்டதைத் தொடர்ந்து ஆரோக்கிய விளைவுகள் எதையும் பற்றிக் கவலைப்படுபவர்கள் வைத்திய ஆலோசனையை நாட வேண்டும்.

## நீலப் பச்சை அல்காக்களின் ஆரோக்கியத் தாக்கங்கள் எவை?

நீர்வழிகளை ஒழுங்குமுறையாகக் கண்காணிப்பதால் அல்காக்களின் பெருக்கங்கள் எதையும் அடையாளம் காணலாம், அவற்றின் அளவுகள் அதிகமாக இருந்தால், பொது எச்சரிக்கை வழங்கப்படும். உயர் அளவுகளில் நீலப் பச்சை அல்காக்களால் பாதிக்கப்பட்ட தண்ணீர் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் ஆரோக்கியக் குறைபாடுகளை ஏற்படுத்தலாம்.

நீலப் பச்சை அல்காக்களின் சில இனங்கள் நச்சுப் பதார்த்தங்களை உற்பத்தி செய்கின்றன, அவற்றை விழுங்கினால், உட்சுவாசித்தால் அல்லது சருமத்துடன் நேரடியாகத் தொடுகையுறவிட்டால் அவை மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் தீங்கானவை. சருமத் தொடுகையானது தோல் மற்றும் கண் எரிச்சல்கள், லேசான சுவாச ரீதியான விளைவுகள், தூசியால் வரும் காய்ச்சலடிப்பது போன்ற அறிகுறிகள் முதலியவற்றை உண்டாக்கலாம். நச்சுப் பதார்த்தங்களுள்ள பாதிக்கப்பட்ட தண்ணீரைக் குடிப்பதால் சத்தியெடுத்தல், வயிற்றோட்டம், காய்ச்சல், தலையிடி போன்ற இரைப்பைக் குடலழற்சி அறிகுறிகள் உண்டாகலாம். நீலப் பச்சை அல்காக்களால் உற்பத்தி செய்யப்படும் நச்சுப் பதார்த்தங்கள் ஈரல் அல்லது நரம்புத் தொகுதியையும் கூடப் பாதிக்கலாம். உங்கள் உடல்நிலை பற்றி உங்களுக்குக் கவலையிருந்தால், வைத்திய ஆலோசனையை நாடுங்கள்.

வளர்ப்புப் பிராணிகளும் கால்நடைகளும் அவற்றின் தொடுகைக்குப் பிறகு உடநலமின்றிப் போகலாம். உங்களுடைய மிருகங்களுக்கு உடல்நலமில்லை என்று சந்தேகித்தால், மிருக வைத்தியரின் ஆலோசனையை நாடுங்கள்.

## பெரியவர்களை விட சிறுவர்களுக்கு நீலப் பச்சை அல்காக்களால் சுலபமாகப் பாதிப்பு ஏற்படுகிறதா?

சிறுவர்களின் உடல் நிறை குறைவாக இருப்பதால், அவர்களை இந்த நச்சுப் பதார்த்தங்களின் விளைவுகள் அதிக சுலபமாகத் தாக்குகின்றன. அவர்களுக்கு பெரியவர்களை விட அதிக உணர்திறனுள்ள சருமம் உள்ளது, அவர்கள் தோல் சொறியால் கூடுதலாக அவதிப்படும் தன்மையுள்ளவர்கள். தண்ணீரை விழுங்க அல்லது உட்சுவாசிக்க அனுமதிக்கும் செயற்பாடுகளில் அதிகளவில் ஈடுபடுபவர்களாகவும் சிறுவர்கள் இருக்கிறார்கள். எந்தவொரு நீர் நிலையிலும் நீச்சலடிக்கும் போது சிறுவர்களை எப்போதும் மேற்பார்வை செய்ய வேண்டும்.

## பாதிக்கப்பட்ட தண்ணீர் என் மீது தொடுகையுறும் போது என்ன செய்ய வேண்டும்?

தண்ணீர் பட்டால், கரைக்கு வந்த பின்னர் பாதிக்கப்பட்ட ஆடையைக் கழற்றி, உங்களைச் சுத்தமான தண்ணீரால் முழுவதுமாகக் கழுவுங்கள். ஈரமான ஆடைகளை மீண்டும் அணியும் முன்பு, அவற்றிலுள்ள அல்காக்களின் சுவடுகள் எதையும் அகற்றுவதற்காக முற்று முழுதாக அலச வேண்டும்.

## நீச்சலடித்து, ஏனைய தண்ணீர் விளையாட்டுகளில் ஈடுபடலாமா?

நீச்சலும் பாதிக்கப்பட்ட தண்ணீருடன் நேரடித் தொடுகையை ஏற்படுத்துகின்ற ஸ்கீயிங், ஊதிப் பெருப்பிக்கக் கூடிய குழாய்கள் மற்றும் □டோனட்ற்கள் உட்பட்ட ஏனைய தண்ணீர் விளையாட்டு அல்லது செயற்பாடும் சிபாரிசு செய்யப்படவில்லை.

## நீலப் பச்சை அல்காக்களால் பாதிக்கப்பட்ட தண்ணீரில் எனது நாய் நீச்சலடிக்கலாமா?

நீலப் பச்சை அல்காக்களின் சில வகைகளுடன் தொடுகையுறுவதால் நாய்களுக்கு நஞ்சூட்டப்படலாம் அல்லது அவை இறக்கலாம். அல்காக்கள் தாக்கியுள்ள பகுதிகளில் உங்களுடைய நாயை நீச்சலடிக்கவோ தண்ணீர் அருந்தவோ விட வேண்டாம். அத்தகைய தண்ணீர் அவற்றின் மீது பட்டுவிட்டால், அல்கா எச்சங்கள் படிவதையும், உள்ளெடுக்கப்படுவதையும் தடுப்பதற்கு நல்ல தண்ணீரைக் கொண்டு அவற்றை நன்கு கழுவி, உலர விடவும். அதைப் பற்றிக் கவலைப்பட்டீர்கள் என்றால், மிருக வைத்தியரின் உதவியை நாடுங்கள்.

## நீலப் பச்சை அல்காக்களால் பாதிக்கப்பட்ட தண்ணீரில் பிடிக்கப்பட்ட மீனைச் சாப்பிடலாமா?

அல்கா தாக்கியுள்ள பகுதிகளில் பிடிக்கப்படும் சிப்பிகள், நண்டுகள் அல்லது இறால்கள் போன்ற எதையும் சாப்பிடக் கூடாது. அங்கு பிடிக்கப்படும் மீன் எதையும் சுத்தமான தண்ணீரில் கழுவி, சுவாசப்பூக்கள், குடல் மற்றும் நிராகரிக்கப்படும் மற்றும் உண்ணப்படாத உட்புற உறுப்புகள் முதலியவற்றை அகற்ற வேண்டும். இந்த மீன்களின் குடல்களை மிருகங்களுக்கு ஊட்டாமல் அல்லது அவை உண்ணவிடாமல் தடுப்பதில் கவனமெடுக்க வேண்டும்.

கூட்டங்கள் இறந்து, பிரிகையடையத் தொடங்கும் போது, அவை தண்ணீரிலுள்ள பிராணவாயுவை உள்ளெடுக்கலாம். தண்ணீரிலுள்ள பிராணவாயுவின் அளவு குறைவாக இருக்கும் போது, மீனுக்கு மூச்சுத்திணறல் ஏற்படலாம். இறந்துவிட்ட, இறக்கின்ற அல்லது ஒழுங்கற்ற விதத்தில் நீந்துகின்ற மீன்களைக் கையாளவோ உண்ணவோ கூடாது. மீன் இறப்பு நிகழ்வை 1300 EPA VIC (1300 372 842) என்ற இலக்கத்தில் Environment Protection Authority தெரிவிக்கலாம்.

## எனது சமூகத்தின் குடிநீர் வழங்கல் குடிப்பதற்குப் பாதுகாப்பானதா?

தண்ணீர் விநியோகிப்பவர்கள் நகரக் குடிநீர் வழங்கல்களுக்கு நீலப் பச்சை அல்கா நச்சுப் பதார்த்தங்களால் ஏற்படும் ஆபத்துகளைச் சமாளிப்பதற்காக சுத்திகரிக்கும் தொகுதிகளை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். உங்களுடைய பிரதான குடிநீர் வழங்கலின் தரம் பற்றி உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால், உங்களுடைய உள்ளூர் தண்ணீர் அதிகாரசபையைத் தொடர்புகொள்ளுங்கள்.

## நீலப் பச்சை அல்காக்கள் தாக்கியுள்ள அணை அல்லது ஓடையிலிருந்து சுத்திகரிக்கப்படாத தண்ணீரைப் பெறுகிறேன் அல்லது சேகரிக்கிறேன் என்றால், நான் என்ன செய்ய வேண்டும்?

பெருக்கம் மறைந்துபோகும் வரை அந்தத் தண்ணீரைப் பாவிப்பதைத் தவிருங்கள்.

மேற்பரப்பில் பெருக்கத்தைப் பார்க்கக் கூடியதாக அல்லது பார்க்க முடியாததாக இருந்தாலும், சுத்திகரிக்கப்படாத தண்ணீரைக் குடிக்காதீர்கள். அல்காவின் பெருக்கங்களால் சாத்தியமான ஆரோக்கிய ஆபத்துகள் ஏற்படுவதோடு, சுத்திகரிக்கப்படாத தண்ணீரும் ஏனைய உடல்நலமின்மைகளை உண்டாக்கக் கூடியது. சுத்திகரிக்கப்படாத தண்ணீரை உணவு தயாரித்தல், குளித்தல், முழுகுதல் மற்றும் பல் துலக்குதல் போன்ற வீட்டுத் தேவைகளுக்காக உபயோகிக்க வேண்டாம். **அல்காக்கள் தாக்கியுள்ள தண்ணீரைக் கொதிக்கவிடுவதால் அந்தத் தண்ணீர் பாதுகாப்பாக மாறாது.**

பாதிக்கப்பட்ட தண்ணீரை நீர்ப்பாசனம் அல்லது கால்நடைகளுக்குப் பாவிக்க வேண்டாம். மேலதிக தகவலை, பின்வரும் Agriculture Victoria இணையத்தளத்தில் பார்க்கலாம்: http://agriculture.vic.gov.au/agriculture/farm-management/soil-and-water/irrigation/blue-green-algae-and-irrigation-water

உங்களுடைய தனிப்பட்ட தண்ணீர் வழங்கல் குறித்த மேலதிக தகவலுக்கு, பின்வரும் Department of Health & Human Services இணையத்தளத்தைப் பாருங்கள்: https://www2.health.vic.gov.au/public-health/water/private-drinking-water-supplies

## நீலப் பச்சை அல்காக்களால் பாதிக்கப்பட்டுள்ள தண்ணீரை எனது தோட்டத்திற்குப் பாய்ச்சலாமா?

பாதிக்கப்பட்டுள்ள தண்ணீரை உங்களுடைய புல்வெளி மற்றும் தோட்ட மேடைகளுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்கு உபயோகிப்பதைத் தவிர்க்கவும். இது தாவரங்களின் வளர்ச்சியைப் பாதிக்கலாம் மற்றும் ஈரமான மேற்பரப்புடன் பின்னர் தொடுகையுறக் கூடிய சிறுவர்கள், வளர்ப்புப் பிராணிகள் மற்றும் மிருகங்களுக்கு ஆபத்தை உண்டுபண்ணக் கூடும். நீர்ப்பாசனம் ஆனது உட்சுவாசிக்கக் கூடிய படலத் திவலையையும் கூட உருவாக்கலாம். வேறு நீர் மூலம் எதுவும் இல்லாவிட்டால், பொருத்தமான உபகரணத்தை உபயோகித்து படலத் திவலையைக் குறையுங்கள், காற்று பொதுவாக அசையாமல் இருக்கின்ற மாலை வேளைகளில் தண்ணீர் பாய்ச்சுங்கள்.

## இந்தப் பெருக்கம் எவ்வளவு காலம் நீடிக்கும்?

பெருக்கம் தொடர்ந்திருக்கும் நிச்சயமான கால நேரம் என்று எதுவுமில்லை. வெதுவெதுப்பான வானிலை, சூரிய வெளிச்சம், போதிய ஊட்டச்சத்து அளவுகள் மற்றும் குறைந்த பாய்வு வீதங்கள் போன்ற சாதகமான நிலைமைகள் தொடர்ந்திருக்கும் போது, பெருக்கங்கள் கிழமைகளிலிருந்து மாதங்கள் வரை நீடிக்கலாம். குளிர்மையான, காற்றடிக்கும் வானிலை அல்லது அதிக காற்றுப்பாய்வானது அவற்றை விரையில் குறைக்கலாம் அல்லது நிறுத்தலாம்.

பெருக்கங்கள் ஏற்படும் போது, காணப்படும் அல்காக்களின் வகை, எண்ணிக்கை, அளவு ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கு ஒழுங்குமுறை அடிப்படையில் சோதனைகள் நடத்தப்படுகின்றன. எச்சரிக்கைகளையும் அறிவித்தல்களையும் தெரிவிப்பதற்கும் மாற்றுவதற்கும் பெறுபேறுகள் உபயோகிக்கப்படும்.

## அல்காக்களின் ஆரோக்கியத் தாக்கங்கள் தொடர்பான மேலதிக தகவல்கள்

1300 761 874 என்ற இலக்கத்தில் Department of Health and Human Service-இன் நீர்த் திட்டத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.

அங்கீகரித்து, வெளியிட்டவர்: விக்ரோரிய அரசாங்கம், 1 Treasury Place, Melbourne.
© விக்ரோரிய மாநிலம், Department of Health and Human Services மார்ச் 2016

இந்த இணையத்தில் கிடைக்கிறது: www2.health.vic.gov.au/public-health/water